# பத்திரிக்கைக் குறிப்பு

**தமிழக அரசின் குடிநீர் மற்றும் சுகாதார கூட்டு நிதியம் (Water and Sanitation Pooled Fund) மத்திய அரசின் கூட்டு நிதி வளர்ச்சி நிதி திட்டத்தின் கீழ் வரியில்லா கடன் பத்திரங்களை வெளியிட்டு ரூ.83.19 கோடி சந்தையிலிருந்து வெற்றிகரமாக திரட்டியுள்ளது**

குடிநீர் மற்றும் சுகாதார கூட்டு நிதி, இந்திய அறக்கட்டளைகள் சட்டம் 1882 ன் கீழ் பதிவு செய்யப்பட்ட ஒரு அறக்கட்டளையாகும்.. இது முழுவதும் தமிழக அரசுக்குச் சொந்தமாகும்.

உள்ளாட்சி அமைப்புகளின் தேவைகளை ஒருங்கிணைத்து அவற்றுக்கு நிதி திரட்டும் நோக்கத்தோடு 2006 ஆம் ஆண்டு மத்திய நகர்ப்புர மேம்பாட்டு அமைச்சகம் கூட்டு நிதி வளர்ச்சி நிதி திட்டத்தினை அறிமுகப்படுத்தியது. தமிழ் நாட்டில் இந்த திட்டத்தினை செயல்படுத்த, குடிநீர் மற்றும் சுகாதார கூட்டு நிதியத்தை, மாநில ஒருங்கிணைப்பு கூட்டு நிதி அமைப்பாக தமிழக அரசு நியமித்து ஆணை வெளியிட்டது. இந்தியாவிலேயே முதலாவதாக, இந்த திட்டத்தின் கீழ் 7.25 சதவீதம் வட்டி அளிக்கக்கூடிய வரியில்லா கடன் பத்திரங்களை வெளியிட்டு 2008 ஆம் ஆண்டில் குடிநீர் மற்றும் சுகாதார கூட்டு நிதியம் ரூ.6.70 கோடி அளவிற்கு (முதல் வெளியீடு) நிதி திரட்டியது.

தரக்குறியீடு நிறுவனமான பிட்ச் ரேட்டிங் நிறுவனம் (FITCH Ratings India Private Limited) இந்த வெளியீட்டிற்கு AA (IND) SO என்னும் தரக்குறியீடு வழங்கியுள்ளது.. மத்திய மற்றும் மாநில அரசுகள் இரண்டுமே இந்த வெளியீட்டினை அங்கீகரித்து இதனுடைய கடன் பெறும் தகுதி அதிகரிப்பு நிதிக்காக (Credit Rating Enhancement Fund) தங்களது பங்கினை அளித்துள்ளன.

குடிநீர் மற்றும் சுகாதார கூட்டு நிதி அமைப்பானது, செப்டம்பர் 8, 2010 அன்று 7.50 சதவீதம் வட்டி அளிக்கக்கூடிய வரியில்லா கடன் பத்திரங்களை வெளியிட்டு ரூ.83.19 கோடி நிதியினை (இரண்டாவது வெளியீடு) முதலின சந்தையிலிருந்து வெற்றிகரமாக திரட்டியுள்ளது. இதன் மூலமாக திரட்டப்பட்ட நிதியைக் கொண்டு விருதுநகர், அம்பத்தூர், பல்லாவரம், காஞ்சிபுரம், இராமநாதபுரம் மற்றும் நாமக்கல் நகராட்சிகளுக்கு பாதாள சாக்கடைத் திட்டத்திற்கும், சேலம் மாநகராட்சியின் குடிநீர் திட்டத்திற்கும் கடன் வழங்குதல் மற்றும் மறுகடன் வழங்குதல் மேற்கொள்ளப்படும்.

இந்த வெளியீடானது மும்பை பங்குச் சந்தையில் (Bombay Stock Exchange) பட்டியலிடப்படவுள்ளது. இந்த வெளியீட்டிற்கு பத்திர பொறுப்பாளர் மற்றும் சேகரிப்பு வங்கியாக இந்தியன் ஓவர்சீஸ் வங்கி செயல்படுகிறது. மும்பையைச் சேர்ந்த Trust Investment Advisors Private Limited இந்த வெளியீட்டின் ஒப்புறுதியாளர்களாக (Underwriter) செயல்பட்டனர்.

குடிநீர் மற்றும் சுகாதார கூட்டு நிதியம், உள்ளாட்சிகளின் தேவைகளை ஒருங்கிணைத்து கடன் பத்திரங்கள் வெளியிடுதலில் முன்னோடியாக விளங்குகிறது,

WATER AND SANITATION POOLED FUND
CHENNAI-600 017